முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.5.2023) சிங்கப்பூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (24.5.2023) சிங்கப்பூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த மின்னணு பாகங்கள் தயாரிப்பு நிறுவனமான HiP International Pvt. Ltd., நிறுவனத்திற்கும் இடையே 312 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சிங்கப்பூர் நாட்டின் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (24.5.2023) சிங்கப்பூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், Singapore University of Technology & Design (SUTD) நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சிங்கப்பூர் நாட்டின் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ். ஈஸ்வரன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சிங்கப்பூரில் சுற்றுப்பயணம் முடித்துக்கொண்டு -

முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஜப்பான் சென்றார்!

விமான நிலையம் சென்ற வழிநெடுகிலும் தமிழர்கள் உற்சாகம்!

சிங்கப்பூர், மே 26-

சிங்கப்பூரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. சிங்கப்பூர் நாட்டில் அனைத்து நிகழ்ச்சிகளையும் முடித்துக்கொண்டு முதல்வர் நேற்று ஜப்பான் புறப்பட்டார்.

தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்தில், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறும் அந்நாட்டு நிறுவனங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்து வருகிறார்.

சிங்கப்பூர் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் Temasek, Sembcorp CapitaLand நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களை நேற்று சந்தித்து பேசினார். சிங்கப்பூர் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தானது.

தொடர்ந்து சிங்கப்பூர் நாட்டின் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ் ஈஸ்வரனை சந்தித்து இரு நாடுகளுக்கிடையே உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது பற்றியும் புதிய தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்வது குறித்தும் உரையாடினார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று சிங்கப்பூர் நாட்டின் உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் சண்முகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து பேசினார். சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

மாநில நிறுவனங்களுக்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்துதல், தரவு தனியுரிமை அம்சங்கள் போன்றவற்றில் அரசு நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு காவல்துறைக்கு ஒத்துழைப்பு அளிப்பது ஆகியவை குறித்து இருவரும் ஆலோசனை மேற்கொண்டனர்.

சிங்கப்பூர், மதுரை இடையே நேரடி விமானச் சேவையைத் தொடங்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று முதலமைச்சரிடம் சிங்கப்பூர் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் இறையன்பு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன், மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

சிங்கப்பூரில் தனது இரண்டு நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு ஜப்பான் செல்வதற்காக சிங்கப்பூர் விமான நிலையம் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், செல்லும் வழியில், தமிழர்கள் அதிகமாக வாழும் லிட்டில் இந்தியா பகுதியில் அமைந்துள்ள உணவகத்திற்குச் சென்று தேநீர் அருந்தினார்.

அப்போது, அங்குள்ள தமிழ் மக்களைச் சந்தித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார்.

தொடர்ந்து அங்கிருந்த ஏராளமானோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் செல்பி எடுத்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

நெல்லையில் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவிப்பு!

மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் மரியாதை செலுத்தினார்!

நெல்லை.மே 26-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நெல்லையில் பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் உள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச்சி லைக்கும், நெல்லை சந்திப்பு பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கும், மாநகராட்சி அலுவலகம் முன்பு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

சென்னையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றபின் 24.5.2023 அன்று நெல்லைக்கு வருகை தந்தார்.

நெல்லைக்கு வந்த நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கானுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் உள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கும், நெல்லை சந்திப்பு பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன்பின்னர் நெல்லை மாநகராட்சி அலுவலகம் முன்பு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வுகளில் நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,

பகுதி செயலாளர்கள் தச்சை சுப்பிரமணியன், பாளை அன்டன் செல்லதுரை, நெல்லை நமச்சிவாயம், மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி, ஒன்றிய செயலாளர் அருள்மணி, மாமன்ற உறுப்பினர்கள், கருப்பசாமி கோட்டையப்பன், வில்சன் மணித்துரை, சுந்தர், மாணவர் அணி மீரான்மைதீன், விவசாய, தொழிலாளர் அணி சண்முகசுந்தரம், கிரிஜாகுமார், அருண்குமார், ரேவதிஅசோக், இசக்கி பாண்டியன், வெங்கடேஷ், கார்டன் சேகர், கண்ணையாபாண்டியன், சாகுல் ஹமீது,சடாமுனி, சிந்து முருகன், காஜாமைதீன், வழக்கறிஞர் அலிப்மீரான், ராஜேஸ்வரி, மணிகண்டன், அயப்பன், குருவையா முகமதுஅலி, ஜலில், ரகுமான், மைதீன், கணேசன், தொ.மு.ச. பேச்சிமுத்து, சிவா உள்பட கழகத்தினர் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

தலைமைக் கழகப் பேச்சாளர்

கம்பம் மு.கலைக்கமால் இல்ல மணவிழா!

கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில்!

கம்பம், மே 26-

தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் கம்பம் மு.கலைக்கமாலின் சகோதரரும் முன்னாள் மாவட்டப் பிரதிநிதியுமான எஸ்.எம். அஹமது பஜீரின் புதல்வர் ஹாஜி ஏ.தமீம் அன்சாரிக்கும் ஏ.ரபீக்கின் புதல்வி ஆர்.உம்சல்மா (எ) ஆஷாவுக்கும் மணவிழா 28.5.2023 ஞாயிறு காலை 11 மணியளவில் கம்பம் மருவரசி மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன், கம்பம் பி.செல்வேந்திரன், ஒ.ஆர்.இராமச்சந்திரன், வி.அச்சுதானந்தன், கவிஞர் தமிழ்தாசன், எஸ்.பி. சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மு.க.ராஜா கான் வரவேற்கிறார்.

இம்மணவிழாவில் வனிதா துரை நெப்போலியன், ஜெயக்குமார், இரா. பாண்டியன், குரு. இளங்கோ, துரை நெப்போலியன், கே.எஸ்.இராமகிருஷ்ணன், எம்.சி.வீரபாண்டியன், ஆர்.கே.செல்வக்குமார், ஒ.ஆர்.குமரேசன், ஏ.ஜெயினுலாவுதீன், பாண்டித்துரை, ஒ.ஆர்.நாராயணன், ஏ.சையது சுல்தான் இப்ராஹீம், கே.ஏ.எஸ்.அப்துல் ஆசிக், ஏ.அஜ்மல்கான், சுனோதா செல்வக்குமார், என்.எம்.ஆர்.வசந்தன், எல்.ரவிச்சந்திரன், ஏ.ரஹீம் அத்தா, சி.பால்பாண்டி ராஜா, சரவணன், வி.அப்துல் காதர், மகேந்திரன் உள்ளிட்டோர் வாழ்த்துகின்றனர்.

மு.க.முகமது சல்வத்தி நன்றி கூறுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் முன்னிட்டு

சின்னமனூரில் கிரிக்கெட் 2 நாள் போட்டி!

வசந்தன் ராமகிருஷ்ணன் துவக்கி வைத்தார்!

தேனி, மே 25-

சின்னமனூர் தென்பழனி மலை அடிவாரத்தில் துர்கா விளையாட்டு மைதானத்தில் சின்னமனூர் சிஐஎஸ்.ஏ கிரிக்கெட் கிளப்பின் 9ம் ஆண்டு மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்பிறந்த நாளை கொண்டாடும் விதமாக இரண்டு நாள் போட்டி துவக்கப்பட்டது.

16 அணிகள் கலந்து கொள்ளும் இந்த போட்டியினை தேனி தெற்கு மாவட்டம் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் வசந்தன் ராமகிருஷ்ணன் போட்டியை துவக்கி வைத்தார். தொடர்ந்து இரண்டு நாட்கள் இந்த போட்டிகள் நடைபெறும்.

அப்போது சின்னமனூர் நகரச் செயலாளர் முத்துக்குமார், தேனி தெற்கு மாவட்ட அவை தலைவர் மனோகரன், தேனி தெற்கு மாவட்ட பிரதிநிதி செந்தில்குமார், தேனி தெற்கு மாவ ட்ட இளைஞரணி அமைப்பாளர் பஞ்சாப் முத்துக்குமரன், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.